கூடுதல் சார்பு நீதிமன்றம், விருத்தாசலம்.
முன்னிலை: திரு.E.செல்வராஜ், பி.சி.ஏ., பி.எல்.,
கூடுதல் சார்பு நீதிபதி, விருத்தாசலம்.
OS.No.166/2023

2026-ம் ஆண்டு ஜூன் திங்கள் 18-ம் நாள் வியாழன்கிழமை

இந்திய உறுதி மொழி சட்டம் (44/1969) 10-வது விதி 4-ம் பிரிவின் கீழ் கூடுதல் சார்பு நீதிபதி, திரு.E.செல்வராஜ், பி.சி.ஏ., பி.எல்., ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**வா.சா.1. (PW-1)**

**பெயர்:** ஜோதி.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. எனது கணவரின் பெயர் வைகுண்டவாசன் என்றால் சரிதான். எனக்கு செந்தில்குமார் என்ற மகனும், 5ம் பிரதிவாதி வள்ளி, 6ம் பிரதிவாதி வச்சலா என்ற இரண்டு மகள்களும் இருந்தார்கள் என்றால் சரிதான். நானும் எனது கணவரான 4ம் பிரதிவாதி வைகுண்டவாசன் என்பவரும் ஒரே வீட்டில் கடந்த இதுநாள் வரையிலும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறோம் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தை விற்ற தேதியிலிருந்து நானும் எனது கணவரும் தனியாக வாழ்ந்து வருகிறோம். கிழக்கிருப்பு கிராமம் வடக்கு தெருவில் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. கோட்டகம் கிராமத்தில் எனது தகப்பனார் வீட்டில் கடந்த பத்து ஆண்டுகளாக வசித்து வருகிறேன்.

2. நான் இந்த வழக்கை தாக்கல் செய்த தேதியில் கோட்டகம் கிராமத்தில்தான் குடியிருந்து வந்தேன் என்றால் சரிதான். கிழக்கிருப்பு கிராமம் வடக்கு தெருவில் எனக்கு ஒரு வீடு உள்ளது என்றால் சரிதான். கிழக்கிருப்பு கிராமத்தில் உள்ள வீட்டில்தான் எனது கணவரான 4ம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கும், எனது கணவரான 4ம் பிரதிவாதிக்கும், எனது மகள்களான 5 மற்றும் 6ம் பிரதிவாதிகளுக்கும் இடையில் எவ்வித மனவருத்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் சர்வே எண் எனக்கு தெரியாது. சொத்தின் விஸ்தீரணம் எண்பத்து இரண்டு செண்ட் ஆகும்.

3. சர்வே எண்.69/3ல் உள்ள மொத்த விஸ்தீரணமான ஒரு ஏக்கர் அறுபத்து இரண்டு செண்ட் முழுவதும் எனது மகன் செந்தில்குமார் என்பவருக்கு தான பத்திரம் மூலம் கிடைக்க பெற்றுள்ளது என்றால்

சரிதான். அந்த முழு விஸ்தீரணத்தின் ஒரு பகுதி சொத்தைப் பொறுத்துத்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கில் செல்வமணி என்பவரின் மர பட்டறை உள்ளது என்றால் கிழக்கில் உள்ளது. செல்வமணி என்பவர் மர பட்டறை வைத்துள்ள சொத்தை 4 முதல் 6 பிரதிவாதிகளிடமிருந்து கிரயம் பெற்றார் என்றால் சரிதான். செல்வமணி என்பவருக்கு எதிராக நான் அசல் வழக்கு எண்.56/2022 என்ற வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கு என்ன ஆனது என்றால் அந்த வழக்கில் எனக்குரிய தொகையை கொடுத்துவிட்டதால் அந்த வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டேன்.

4. செல்வமணி என்பவர் எனக்கு பணம் கொடுத்ததற்கு எழுத்து மூல ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. பரமசிவம், ரகுபதி, சண்முகம் ஆகியோருக்கு 4 முதல் 6 பிரதிவாதிகள் சொத்தை கிரயம் செய்துக் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். பரமசிவம், ரகுபதி, சண்முகம் ஆகியோர் 4 முதல் 6 பிரதிவாதிகளிடமிருந்து கிரயம் பெற்றுள்ள சொத்தானது எனது மகனுக்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான். பரமசிவம், ரகுபதி, சண்முகம் ஆகியோருக்கு எதிராக நான் இதுநாள் வரையில் எவ்வித வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. வழக்குச் சொத்தினை ஒட்டித்தான் பரமசிவம், ரகுபதி, சண்முகம் ஆகியோர் கிரயம் பெற்றுள்ள சொத்துக்கள் உள்ளன என்றால் சரிதான். எனது கணவரான 4ம் பிரதிவாதி கடந்த 27.01.2000ம் தேதியன்று வா.சா.ஆ–10 தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது மகன் செந்தில்குமார் என்பவர் 2007ம் ஆண்டில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். வா.சா.ஆ–10 ஆவணம் ஏற்பட்ட தேதியிலிருந்து எனது மகன் செந்தில்குமார் என்பவர் இறந்த தேதி வரையில் வா.சா.ஆ–10 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தை எனது மகன் ஒப்புக்கொண்டு அனுபவித்து வந்தார் என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ–10 தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் ஆவணமானது எனது கணவரான 4ம் பிரதிவாதியிடம்தான் உள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி என்னிடமிருந்து வாங்கிச் சென்றுவிட்டார். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள சார் பதிவாளர் அலுவலக ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை எனது கணவரான 4ம் பிரதிவாதிதான் எனக்கு பெற்றுக்கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் பாண்டியன் என்பவர் மூலம் அந்த ஆவணங்களை பெற்றேன். எனது கணவரான 4ம் பிரதிவாதி வா.சா.ஆ–10 தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில்

கண்டுள்ள சொத்துக்களை வா.சா.ஆ-1 மற்றும் வா.சா.ஆ-2 தானசெட்டில்மெண்ட் பத்திரங்கள் மூலம் எனது மகள்களான 5 மற்றும் 6ம் பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்துவிட்டார் என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ-1 மற்றும் வா.சா.ஆ.2 தானசெட்டில்மெண்ட் ஆவணங்கள் எழுதப்பட்ட தேதியில் அந்த ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்களை 4ம் பிரதிவாதிதான் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். 4 முதல் 6 பிரதிவாதிகள் சேர்ந்து வழக்குச் சொத்தை கடந்த 26.05.2008ம் தேதியன்று வா.சா.ஆ-3 கிரய பத்திரம் மூலம் 1ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். வழக்குச் சொத்தை 1ம் பிரதிவாதி கடந்த 26.05.2008ம் தேதியிலிருந்து இதுநாள் வரையில் அனுபவித்து வருகிறார் என்றால் நான் அனுபவித்து வருகிறேன். 1ம் பிரதிவாதி வழக்குச் சொத்தில் கொட்டகை மட்டுமே போட்டுள்ளார்.

8. வழக்குச் சொத்தில் முந்திரி உடைக்கும் இயந்திரம், முந்திரி உலர்த்தும் சிமெண்ட் களம், முந்திரியை சேமித்து வைக்க குடோவுன் ஆகியவற்றிற்கு 1ம் பிரதிவாதி வழக்குச் சொத்தில் கட்டிடம் கட்டி ஆஸ்பெஸ்டாஸ் சீட் போட்டுள்ளார் என்றாலும், 1ம் பிரதிவாதி குடியிருந்து வருவதற்கு வழக்குச் சொத்தில் மெத்தை வீடு கட்டியுள்ளார் என்றாலும் சரிதான். வழக்குச் சொத்தில் உள்ள வீட்டிற்கும், முந்திரி உடைக்கும் இயந்திரங்களுக்கும் மின் இணைப்பு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்குச் சொத்தில் உள்ள கட்டிடங்களுக்கு 1ம் பிரதிவாதி வீட்டு வரி செலுத்தி வருகிறார் என்றாலும், வழக்குச் சொத்தில் 1ம் பிரதிவாதி செய்து வரும் தொழிலுக்கு தொழில் வரி செலுத்தி வருகிறார் என்றாலும், மின் இணைப்பிற்கு மின் கட்டணம் செலுத்தி வருகிறார் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது.

9. 1ம் பிரதிவாதி வழக்குச் சொத்தில் முந்திரி உடைக்கும் இயந்திரம் அமைத்து தொழில் செய்வதற்கு பண்ருட்டி இலட்சுமி விலாஸ் வங்கியில் வழக்குச் சொத்தை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி வழக்குச் சொத்தை பண்ருட்டி இலட்சுமி விலாஸ் வங்கியில் அடமானம் வைத்து கடன் பெறுவதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை என்று நான் நோட்டரி பப்ளிக் முன்னிலையில் கையொப்பம் செய்து ஒரு அபிடவிட் கொடுத்துள்ளேன் என்றால் நான் மனநிலை சரியில்லாமல் இருந்த நேரத்தில் 1ம் பிரதிவாதி பத்திரத்தில் கைரேகை செய்ய வேண்டுமென்று கேட்டு வாங்கிச் சென்றுவிட்டார்.

10. 1ம் பிரதிவாதி பண்ருட்டி இலட்சுமி விலாஸ் வங்கியில் பெற்ற கடனை பைசல் செய்துவிட்டார் என்றால் சரிதான். எனக்கு கையொப்பம் போட தெரியாது என்றாலும், நான் கைரேகைதான் வைப்பேன் என்றாலும் சரிதான். வா.சா.ஆ–1 மற்றும் வா.சா.ஆ.2 தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதப்பட்டபோது நான் முதல் சாட்சியாக கைரேகை வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. கனகவேல் மனைவி சிவசக்தி என்பவர் எனக்கு உறவினர் என்றால் சரிதான். வா.சா.ஆ–1 மற்றும் வா.சா.ஆ.2 தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதப்பட்டபோது நான் ஆவண எழுத்த இராஜதுரை என்பவரின் அலுவலகத்திற்கு சென்று வா.சா.ஆ–1 மற்றும் வா.சா.ஆ–2 ஆவணங்களில் நான் முதல் சாட்சியாக கைரேகை வைத்தேன் என்றால் சரியல்ல.

11. 4ம் பிரதிவாதி எனது மகனின் பெயருக்கு எழுதி வைத்த வா.சா.ஆ.10 தானசெட்டில்மெண்ட் பத்திரம் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 தானசெட்டில்மெண்ட் பத்திரம் நடைமுறைக்கு வராத காரணத்தினால் சொத்தானது 4ம் பிரதிவாதிக்கு உரிமை உடையதாக இருந்து அந்த சொத்தை எனது மகள்களான 5 மற்றும் 6ம் பிரதிவாதிகளுக்கு வா.சா.ஆ–1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் மூலம் கொடுத்து 4 முதல் 6 பிரதிவாதிகள் வா.சா.ஆ–10ல் உள்ள சொத்து முழுவதையும் 1ம் பிரதிவாதி உட்பட பல்வேறு நபர்களுக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றாலும், வழக்குச் சொத்தை 1ம் பிரதிவாதி பெற்றுள்ள கிரயமானது செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. 12.
வழக்குச் சொத்தானது எனது அனுபவத்தில் எந்த காலத்திலும் இருந்து வந்ததில்லை என்றாலும், வழக்குச் சொத்தானது வா.சா.ஆ.3 ஆவணம் ஏற்பட்ட தேதியிலிருந்து 1ம் பிரதிவாதியின் வசத்திலும், அனுபவத்திலும் இருந்து வருகிறது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. எனது கணவரான 4ம் பிரதிவாதி வா.சா.ஆ.10ல் உள்ள சொத்துக்களை வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 மூலம் எனது மகள்களான 5, 6 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்தபோது நானும் உடன் இருந்து சாட்சியாக கைரேகை வைத்துள்ளேன் என்றாலும், தற்போது வழக்கிற்காக வா.சா.ஆ–1 மற்றும் வா.சா.ஆ.2ல் உள்ள முதலாவது சாட்சி நான் இல்லை என்று மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல.

13. எனக்கு எந்த காலத்திலும் மன நிலை பாதிப்பு ஏற்படவில்லை என்றாலும், என்னிடமிருந்து 1ம் பிரதிவாதி எவ்வித ஆவணங்களையும் பெற்று செல்லவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் நான்

கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றாலும் சரியல்ல. நானும், எனது கணவரான 4ம் பிரதிவாதியும் ஒற்றுமையாக ஒரே வீட்டில்தான் கடந்த இதுநாள் வரையிலும் வசித்து வருகிறோம் என்றாலும், எனது கணவரான 4ம் பிரதிவாதியின் தூண்டுதலின்பேரில் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** – இல்லை.

Typed to my dictation in the open Court as per the Statement of the witness, read over to the witness and admitted by him/ her to be correct.

Additional Subordinate Judge,
Vridhachalam.